# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**14.09.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. 14.09.22
   - இன்று **சர்வதேச கலாச்சார ஒற்றுமை தினம்**.
   - **ஹிந்தி மொழி தினம்.**
   - ( 1949 ல் இந்நாளில் இந்திய ஆட்சி மொழியாக ஹிந்தி ஏற்கப்பட்டது.)
   - ரஷ்யா அதிகாரப்பூர்வ குடியரசு (1917) நாடானது.

## மாநில செய்திகள்

1. சென்னை உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதியாக பொறுப்பேற்பு
   - சென்னை உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக **எம்.துரைசாமி** பொறுப்பேற்றுக் கொண்டார்.
   - சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்து வந்த முனீஸ்வரன்நாத் பண்டாரி ஓய்வு பெற்றார்.
   - இதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தின் மூத்த நீதிபதியான எம்.துரைசாமியை பொறுப்பு தலைமை நீதிபதியாக நியமித்து மத்திய அரசு உத்தரவிட்டிருந்தது.
   - அதன்படி உயர் நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதியாக எம்.துரைசாமி பொறுப்பேற்றுக் கொண்டார்.
   - வரும் **செப்டம்பர் 21ஆம்** தேதி உடன் நீதிபதி எம்.துரைசாமி ஓய்வு பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## மத்திய செய்திகள்

1. ககன்யான் திட்டம்
   - விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் ககன்யான் திட்டத்தின் ஒரு பகுதியாக முதலாவது சோதனை விண்கலம் நிகழாண்டு விண்வெளிக்கு செலுத்தப்படும் என்றார் மத்திய அமைச்சர் **ஜிதேந்திர சிங்.**
   - வரும் 2024 ககன்யான் விண்கலம் விண்வெளிக்கு செலுத்தப்படும் அடுத்த ஆண்டு விண்வெளிக்கு அனுப்பப்பட உள்ள **வியோம் மித்ரா** என்ற பெண் உருவம் கொண்ட ரோபோ கண்காணிக்கும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 4 விமானங்களை இந்திய விமானப்படை அடையாளம் கண்டுள்ளது.
   - அவர்களுக்கு **ரஷ்யாவில் அடிப்படை பயிற்சி** அளிக்கப்பட்டது.
   - விண்வெளியின் சுற்று வட்ட பாதையில் நிலைநிறுத்தப்படும் சோதனை விண்கலத்தின் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு 2024 இல் புவியின் சுற்றுவட்ட பாதைக்கு இரண்டு விண்வெளி வீரர்களை நிலவுக்கு **சந்திராயன் 3** விண்கலத்தை அடுத்த ஆண்டில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.

## 2. 86 அரசியல் கட்சிகளின் பதிவு ரத்து :தேர்தல் ஆணையம்

- அங்கீகரிக்கப்படாத மேலும் 86 அரசியல் கட்சிகளின் பதிவை ரத்து செய்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது.
- இதன் மூலம் பதிவை இழந்த கட்சிகளின் எண்ணிக்கை **537 ஆக** அதிகரித்துள்ளது.
- தேர்தல் ஜனநாயகத்தின் தூய்மையை காக்கவும் பெரும்பகுதி மக்களின் நலனை கருத்தில் கொண்டு உடனடி சரி செய்தல் நடவடிக்கையின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத 253 கட்சிகளின் பதிவு செயலிழந்ததாக தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- தலைமை தேர்தல் ஆணையர் **ராஜீவ்குமார்** மற்றும் தேர்தல் ஆணையர் **அனுப்சந்திர பாண்டியர்** ஆகியோர் மேற்கொண்ட ஆலோசனை கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் 13 கட்சிகள் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆறு ஆண்டுகள் வரை தேர்தலில் போட்டியிடாத **13 கட்சிகளின்** பதிவை ரத்து செய்ய தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது.
- முகவரி உள்ளிட்ட தலைவர்கள் தகவல்களை சரிபார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது குறிப்பிட்ட முகவரியில் அந்த அரசியல் கட்சிகள் செயல்படாதது தெரியவந்ததன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படாத **86 அரசியல் கட்சிகளின்** பதிவு ரத்து செய்யப்பட்டுள்ளது.
- **1968 தேர்தல்** சின்ன நடைமுறையின் கீழான பலன்களை இந்த கட்சிகள் இனி பெற முடியாது.

## 3. தேர்தலில் போட்டியிடுவது அடிப்படை உரிமை இல்லை

- மாநிலங்களவையில் காலியான இடங்களுக்கான தேர்தல் அறிக்கை கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது.
- அதில் போட்டியிட மனு தாக்கல் செய்த நிலையில் போதிய எண்ணிக்கையிலான **முன்மொழிபவர்களும், வழிமொழிபவர்களும் இல்லை** எனக் கூறி தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக தில்லி உயர் நீதிமன்றத்தில் ஒருவர் மனு தாக்கல் செய்தார்.
- மக்கள் பிரதிநிதித்துவ சட்டமும் **(1950),** தேர்தல் நடத்தை விதிகளும் **(1961)** குறிப்பிட்ட வேட்பாளரை வாக்காளர்கள் முன்மொழிய வேண்டும் என வலியுறுத்துகின்றன.
- அதன் அடிப்படையில் தேர்தல் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதை அடிப்படை உரிமை மீறலாக கோர முடியாது என்றனர்.

## 4. கரோனா தோற்றத்தை கண்டறிய வலியுறுத்த வேண்டும்

- கரோனா தீநுண்மி உருவான இடத்தை கண்டறிந்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட உலக நாடுகளை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரை செய்துள்ளது.
- நாட்டில் கரோனா தணிப்பு நடவடிக்கைகள் தடுப்பூசி மேம்பாடு மற்றும்

விநியோகம் மேலாண்மை ஆகியவை குறித்து ஆய்வு செய்த சுகாதாரத்துக்கான நாடாளுமன்ற நிலை குழு தனது **137 வது அறிக்கையை** மாநிலங்களவையில் சமர்ப்பித்தது.

- அதில் பல்வேறு பரிந்துரைகளை செய்துள்ளது.

### 5. குஜராத்தில் செமி கண்டக்டர் தொழிற்சாலை

- **இந்திய தொழில் நிறுவனமான வேதாந்தா** மற்றும் **தைவானின் மின்னணு பொருள்கள் தயாரிப்பு நிறுவனமான ஃபாக்ஸ்கான்** இணைந்து குஜராத்தில் செமி கண்டக்டர் தொழிற்சாலை மற்றும் மின்னணு சாதனங்களுக்கான திரை தயாரிப்பு பிரிவை நிறுவனம் மாநில அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன.
- கார் உள்ளிட்ட வாகனங்கள், கைப்பேசிகள் பிற மின்னணு சாதனங்களில் பயன்படுத்தப்படும் செமிகண்டக்டர் சிப்கள் இந்தியாவில் தயாரிக்கப்படுவதில்லை.
- மாறாக, இந்த சிப்க்களுக்காக இறக்குமதியை இந்தியா சார்ந்துள்ளது.
- உலகில் **எட்டு சதவீத** செமிகண்டக்டர் சிப்க்களை **தைவான், சீனா, ஜப்பான்** ஆகிய மூன்று நாடுகள் உற்பத்தி செய்கின்றன.
- இத்தகைய முதலீட்டின் மூலம் சிப்க்களை தயாரிக்கும் மையமாக இந்தியா திகழும் என்பதால் செமிகண்டக்டர் சிப்களுக்கு பிற நாடுகளை சார்ந்து இருப்பதற்கான தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 6. கென்யா அதிபர் ஆனார் வில்லியம் ரூட்டோ

- கென்யாவின் புதிய அதிபராக **வில்லியம் ரூட்டோ** பொறுப்பேற்றுக் கொண்டார்.
- கடந்த மாதம் நடைபெற்ற தேர்தலில் **50.5%** வாக்குகளுடன் அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டாலும் அந்த முடிவை எதிர்த்த நீதிமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் **ரய்லா ஒடிங்கா** மனு தாக்கல் செய்தார்.
- எனினும் **ரய்லாவின்** மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து, அதிபராக ரூட்டோ தற்போது பதவியேற்றுள்ளார்.

### 7. 'அஸ்டானா' வாகிறது கஜகஸ்தான் தலைநகர்

- கஜகஸ்தான் தலைநகரின் பெயரை மீண்டும் **அஸ்டானாவாக** மாற்ற அதிபர் **காஸிம் ஜொமார்ட் டோகயேவ்** ஒப்புக்கொண்டார்.
- கடந்த 2019 -ஆம் ஆண்டில் அவர் பதவியேற்ற போது அவருக்கு முந்தைய அதிபரான் **நூல் சுல்தான் நாஸர் பயேவை** கவுரவிக்கும் வகையில் தலைநகருக்கு நூர் சுல்தான் என்று டோகயேவ் பெயர் மாற்றம் செய்திருந்தார்.
- இந்த நிலையில் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நகர் மீண்டும் அஸ்டானா என்று அழைக்கப்பட உள்ளது.